**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 101/2015**

**அ.சா : 6**

| | | |
|---|---|---|
| பெயர் | : | ரவிக்குமார் |
| தகப்பனார் /கணவர்பெயர் | : | மாது |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| மதம் | : | |
| வயது | : | 56 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 27.03.2025.**

**1, 3, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த வருகிறேன். கடந்த 2015 ஆம் வருடம் மத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது இந்தியன் வங்கி கிளை மோலாளர் தினேஷ் குமார் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரை பெற்று மத்தூர் காவல் நிலைய குற்ற எண்.21/2015 சட்ட பிரிவுகள்.457, 511 இதசவாக வழக்கு பதிவு செய்தேன். புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை அசலை இந்நீதிமன்றத்திற்க்கு அனுப்பி வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 12.01.2015 ஆம் தேதி 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தினேஷ்குமார், முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைப்படம் தயார் செய்தேன். **மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 நபர்களை

தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்னர் 14.03.2015 ஆம் தேதி இராயகோட்டை காவல் நிலைய குற்ற எண்.113/2015 சட்ட பிரிவுகள்.392 இதச வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் சோமசேகர், ராமு (எ) ராமசாமி, கணேஷ், விசால் ஆகியோர்களை இராயக்கோட்டை காவல் ஆய்வாளர் அவர்கள் கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மத்தூர் காவல் நிலைய குற்ற எண்.21/2015 வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளதாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் மேற்படி எதிரிகளை 18.03.2015 ஆம் தேதி சம்பிரதாய கைதுக்காக விண்ணப்பம் கொடுத்து 24.03.2015 ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு மேற்படி எதிரிகளை சிறை காவல் கண்காணிப்பாளர் முன்னிலையில் சம்பிரதாய கைது செய்து P.T Warrant பெறப்பட்டது. வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது 30.03.2015 ஆம் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புகாரில் எதிரிகளை பெயரை புகார்தாரர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேப்போல் இவ்வழக்கின் மற்ற சாட்சிகளும் எதிரிகளின் பேரில் சம்பவத்தோடு தொடர்புபடுத்தி கூறவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகள் இந்த வழக்கில் ஈடுப்பட்டதாக எவ்வாறு தெரிய வந்தது என்றால் இராயக்கோட்டை காவல் நிலைய குற்ற எண் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தெரிய வந்தது. அந்த ஒப்புதல் வாக்குமூலம் பெறும் வரை இவ்வழக்கில் எதிரிகளை அடையாளம் காண நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரிகளிடம் தனியாக ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை. ATM

வளாகத்தில் உள்ள CCTV Footage களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

2. மேற்படி ATM ன் செக்யூரிட்டியை நான் விசாரித்தேன். அவரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை. ATM அருகில் உள்ள வீடுகள் மற்றும் கடைகளில் உள்ள நபர்களை நான் விசாரித்தேன், ஆனால் யாரும் வாக்குமூலம் அளிக்க முன்வரவில்லை. மேற்படி ATM ல் இருந்து எந்தவிதமான பொருளும் திருடுபோகவில்லை என்று சொன்னால் சரியல்ல. இராயக்கோட்டை காவல் நிலையத்தில் இருந்த எனக்கு எவ்வாறு தகவல் வந்தது என்றால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து தகவல் வந்தது. வழக்கு கோப்பில் அதுகுறித்து குறிப்புகள் இல்லை. வான்செய்தி தான் வந்தது. ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற ஆய்வாளரை நான் வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை. அது விடுப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், நான் ஆய்வாளரை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

3. சம்பிரதாய கைது மேற்கொள்ளும்போது என்னுடன் காவலர்கள் யாரும் வரவில்லை. இராயக்கோட்டை காவல் நிலையத்தில் இருந்து 14.03.2015 ஆம் தேதி தகவல் வந்தது. நான் சம்பிரதாய கைது 24.03.2015 ஆம் தேதி சேலம் மத்திய சிறையில் செய்தேன். காலதாமதமாக சம்பிரதாக கைது செய்ததற்க்கு காரணம் என்னவென்றால் நீதிமன்றத்தில் இருந்து உத்தரவு வரவில்லை. சம்பிரதாய கைதுக்கு 18.03.2015 ஆம் தேதி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தேன். நீதிமன்றத்தில் உத்தரவானது 24.03.2015 ஆம் தேதி கொடுத்தார்கள். மேற்படி 2 ஆவணங்களை நான் வழக்கு இறுதி அறிக்கையோடு தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் மனுவும் தாக்கல் செய்யவில்லை, உத்தரவும் ஆகவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. புகார்தாரரின் புகாரை முடிக்க வேண்டும் என்ற நோக்கில் எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்க்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் சம்பவ இடத்தில் இருந்து கைரேகை எதுவும் கைப்பற்றினேனா என்றால் எதுவும் கிடைக்கவில்லை. இவ்வழக்கில் ATM யை உடைக்க பயன்படுத்திய கடைப்பாறையை நான் கைப்பற்றவில்லை. நான் சொல்வது போல் சம்பவமே நடைப்பெறாத காரணத்தால் தான் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

Distirct Munsif cum
Judicial Magaistrate

SHANMUGANATHAN Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.